


மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (19.05.2023) சென்னையில், தேசிய காசநோய் ஒழிப்பு திட்டத்தின் கீழ் காசநோய் ஒழிப்பு உச்சி மாநாட்டை தொடங்கி வைத்து, காணொலி காட்சி மூலம் கோயம்புத்தூர் மற்றும் திருச்சியில் அமைக்கப்பட்டுள்ள C&DST ஆய்வகங்களை திறந்து வைத்தார். இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அரசு முதன்மைச் செயலாளர் ககன்தீப்சிங்பேடி, தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் திருமதி.ஷில்பா பிரபாகர் சதீஷ், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு.தி.சி.செல்வவிநாயகம், மருத்துவக் கல்வி இயக்குநர் மரு.இரா.சாந்திமலர், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர் மரு.சண்முகக்கனி, உலக சுகாதார அமைப்பின் தலைமை விஞ்ஞானி மரு.சௌமியா சுவாமிநாதன், மரு.ரஞ்ஜனி ராமச்சந்திரன், மாநில காசநோய் அலுவலர் மரு.ஆஷா ஃபிரெடெரிக் மற்றும் அனைத்து மாவட்ட துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள், அனைத்து மாநகர நல அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

ஜல்லிக்கட்டு வழக்கு: உச்சநீதிமன்ற வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பை வரவேற்கிறோம்!

# திராவிடக் கலாச்சாரத்துக்குக் கிடைத்த மாபெரும் வெற்றி!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

சென்னை, மே 20 - ஜல்லிக்கட்டு வழக்கு: உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு; திராவிடக் கலாச்சாரத்துக்குக் கிடைத்த பெரு வெற்றி! உச்சநீதிமன்ற வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பை வரவேற்கிறோம்!! என திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:



ஜல்லிக்கட்டு நடத்தத் தடையில்லை என்று மாண்பமை உச்சநீதிமன்ற நீதிபதி கே.எம்.ஜோசப் தலைமையிலான 5 நீதிபதிகள் அடங்கிய அரசமைப்புச் சட்ட அமர்வு 18.5.2023 அன்று வழங்கியுள்ள தீர்ப்பு வரவேற்கத்தக்கதும் வரலாற்றுச் சிறப்புமிக்கதும் ஆகும்.

இது, சிந்துவெளி நாகரிகம் முதல் இன்று வரை தொடரும் திராவிடர் வரலாற்றுத் தொடர்ச்சியின் அடையாளத்திற்குக் கிடைத்த பெரு வெற்றியாகும். தமிழ்நாடு அரசின் வாதங்களை ஏற்றுக் கொண்டு, ஜல்லிக்கட்டைத் தடை செய்ய முயன்ற ஆரிய சூழ்ச்சிகளுக்கு சம்மட்டி அடி வழங்கியுள்ளது உச்சநீதிமன்றம்.

சட்டரீதியாக சரியாக எதிர்கொண்ட தமிழ்நாடு அரசுக்கு நமது பாராட்டுகள்! பண்பாட்டுப் படையெடுப்புகளுக்கு எதிரான திராவிடர் வரலாற்று, பண்பாட்டு அடையாள மீட்புப் போரில் இது ஒரு முக்கிய மைல் கல்லாகும்.

இவ்வாறு அவ்வறிக்கையில் கி.வீரமணி அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

2022 - 23 ஆம் கல்வி ஆண்டிற்கான அரசு - தனியார் மருத்துவக் கல்லூரிகளில்

# முதுநிலை - இளநிலை மருத்துவப் படிப்பிற்கு இடப்பங்கீடு கூட்டம்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையில் நடைபெற்றது!

சென்னை, மே.20- மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையில் நேற்று (19.05.2023) சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் உள்ள தமிழ் நாடு அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனையில் உள்ள கூட்டரங்கில் 2022-23 ஆம் கல்வி ஆண்டிற்கான முதுநிலை மருத்துவம், முதுநிலை பல் மருத்துவம், இளநிலை மருத்துவம் மற்றும் இளநிலை பல் மருத்துவம் சுயநிதிக் கல்லூரிகளில் உள்ள அரசு மற்றும் தனியார் இடப் பங்கீடு குறித்து கூட்டம் நடைபெற்றது.

பின்னர் அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது;

2022-23 ஆம் ஆண்டு கல்வியாண்டிற்கான முதுநிலை மருத்துவம், பல் மருத்துவம் மற்றும் இளநிலை மருத்துவம், பல் மருத்துவம் சுயநிதிக் கல்லூரிகளில் உள்ள அரசு மற்றும் தனியார் இடப் பங்கீடு குறித்து விதிகளுக்குட்பட்டு இணக்கமான முடிவிற்கான கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தைப் பொறுத்தவரை ஆண்டுதோறும் வழக்கமாக நடைபெறுகின்ற கூட்டம் ஆகும். ஒவ்வொரு கல்வியாண்டிற்கு முன்னால் மருத்துவக்கல்வி மாணவர்கள் சேர்க்கை சம்பந்தமாக அரசிற்கும், சுயநிதிக் கல்லூரிகளுக்கு உள்ள இடங்களின் பங்கீடு குறித்து விவாதிப்பது என்பது வழக்கமாகும். இன்று அக்கூட்டம் மிகச் சிறப்பாக நடைபெற்று இருக்கிறது. தமிழ் நாட்டில் முதுநிலைப் பட்டப் படிப்புகள் படிப்பதற்கு 18 சுயநிதிக் கல்லூரிகள் முது நிலை பல் மருத்துவம் படிப்பதற்கு 16 சுயநிதிக் கல்லூரிகள் இளநிலை மருத்துவம் படிப்பதற்கு 19 சுயநிதி கல்லூரிகள் மற்றும் இளநிலை பல் மருத்துவம் படிப்பதற்கு 20 சுயநிதிக் கல்லூரிகள் உள்ளன. இவற்றில் 7 சிறுபான்மையினர் கல்லூரிகளாகும். அந்தவகையில் 2022-23ஆம் கல்வியாண்டில் சுயநிதிக் கல்லூரிகளுக்கு அளிக்கப்பட்ட இடப் பங்கீடு என்பது முதுநிலை பட்டப் படிப்பு அரசு ஒதுக்கீடு 407இடங்கள், தனியார் ஒதுக்கீடு 385 இடங்கள், முதுநிலை பல் மருத்துவப் பட்டப்படிப்பு அரசு 139 இடங்கள், தனியார் 157 இடங்கள் உள்ளன. அதேபோல் இளநிலை மருத்துவ பட்டப் படிப்பிற்கு அரசுக்கு 1739 இடங்கள், தனியார் கல்லூரிகளுக்கு 1311 இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இளநிலை பல் மருத்துவ பட்டப்படிப்பிற்கு அரசுக்கு 1410 இடங்கள், தனியார் கல்லூரிகளுக்கு 540 இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதே போன்று இந்தாண்டு இடப் பங்கீடும் தொடரும் என்று கூட்டத்தில் முடிவெடுக்கப் பட்டது.

சுயநிதிக் கல்லூரிகளில் அவர்களுக்கு இருக்கின்ற பிரச்சினைகள் உடனடியாக நீட் தேர்வு முடிவுகள் வந்தவுடன் கவுன்சிலிங் தொடங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை வைக்கப்பட்டது. பொதுவாக ஒன்றிய அரசின் பங்கீடான 15% இடஒதுக்கீடு அவர்களுக்கு முடிவுற்றதற்கு பிறகு தான் மாநில அரசுகள் கவுன்சிலிங் நடத்த இயலும். அதில் ஒன்றிய அரசின் சார்பில் கடந்த ஆண்டு காலதாமதம் ஏற்பட்டது. இந்தாண்டு அது நடைபெறாது என்று கருதுகிறோம். ஏற்கெனவே சொன்னதுபோல் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலைப் பெற்று, நானும் துறையின் செயலாரும் மிக விரைவில் ஜீன் முதல் வாரத்தில் ஒன்றிய மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களையும், ஆயுஷ் அமைச்சர் அவர்களையும் சந்தித்து தமிழ்நாட்டின் மருத்துவ கட்டமைப்புகளின் தேவைகள் குறித்து பேச உள்ளோம். நீட் தேர்வு முடிவு வந்தவுடன் உடனடியாக ஒன்றிய அரசு 15 % கவுன்சிலிங் உடனடியாக முடித்து அந்தந்த மாநில அரசுகள் விரைந்து கவுன்சிலிங் நடத்திட வேண்டும் என்கின்ற கோரிக்கை அளிக்கவிருக்கிறோம். அந்தவகையில் ஜீன் முதல் வாரத்தில் நீட் தேர்வு முடிவு வந்தவுடன் ஒன்றிய அரசு விரைந்து காலதாமதம் இல்லாமல் கவுன்சிலிங் நடத்தும் என்று சொல்லியிருக்கிறது. அந்தவகையில் இன்று நடைபெற்ற இந்த இடஒதுக்கீட்டு தொடர்பான கூட்டம் சுமுகமாக முடிவுற்றுள்ளது.

இவ்வாறு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அரசு முதன்மைச் செயலாளர் ககன்தீப்சிங் பேடி, மருத்துவக் கல்வி இயக்குநர் மரு.இரா.சாந்திமலர், தேர்வுக் குழுச் செயலாளர் மரு.முத்துச்செல்வன் மற்றும் தனியார் மருத்துவக் கல்லூரி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

பல்வேறு நிதி நிறுவனங்கள் மூலம் நிதி பெற்று பால் வளத்துறையில்

# வளர்ச்சி திட்டப் பணிகள் மேற்கொள்ள கலந்தாய்வுக் கூட்டம்!

## அமைச்சர் மனோ தங்கராஜ் தலைமையில் நடைபெற்றது!

சென்னை, மே.20- பால்வளத்துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ் தலைமையில் சென்னை, நந்தனம் ஆவின் இல்லத்தில் நேற்று (19.05.2023) கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், வள மேலாண்மை, தொழிற்சாலை நிர்வாகம், தானியங்கி முறைகள் (Automation methods), பால் உள்கட்டமைப்பு மேலாண்மை, விரிவாக்க அலகுகளை அமைத்தல், போக்குவரத்தை தானியக்கமாக்குவதற்கு தொழில் நுட்பத்தை பயன்படுத்துதல், நிர்வாகத்தை ஒழுங்குபடுத்துதல், ஆற்றல் சேமிப்பு இயந்திரங்கள், விவாசாயிகளுக்கு தரமான தீவனம் வழங்குதல் மற்றும் வணிக விரிவாக்கம் குறித்து அலுவலர்கள் மற்றும் பால் வளத்துறைக்கு பல்வேறு திட்டத்திற்கு நிதி வழங்கும், நிதி நிறுவனமான NABARD, திட்டங்களுக்கு நிதி உதவி வழங்கும் அரசு அமைப்புகளான TANII, SBGF, DIDF, NPDD, TAHDCO, RGM (MOFPI PMSY) இவர்களுடன் கலந்தாலோசனை கூட்டம் மேற்கொள்ளப்பட்டது.

இக்கூட்டத்தில் சட்டப் பேரவை அறிவிப்புகள் குறித்தும் அலுவலர்களுடன் கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சட்டப்பேரவையில் அறிவித்து நடைபெற்று வரும் பணிகளை விரைந்து முடித்து பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் என்று கூறினார்.

இக்கூட்டத்தில் பால்வளத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது:

ஆவினில் பணிபுரியும் ஒப்பந்த பணியாளர்களுக்கு ஊதியத்தினை இணைய வழியில் மட்டுமே செலுத்தப்படுவதை அலுவலர்கள் உறுதி செய்திட வேண்டும். மாவட்ட ஒன்றியம் மற்றும் இணையங்களில் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் பணியாளர்களுக்கு அவர்களின் மாதாந்திர ஊதியத்தை அவர்களுடைய வங்கி கணக்கில் நேரடியாக செலுத்த வேண்டும். ஒப்பந்ததாரர்கள் அவ்வாறு வங்கிக் கணக்கில் செலுத்துவதை ஒன்றிய மற்றும் இணைய நிர்வாகம் கண்காணித்து உறுதி படுத்த வேண்டும். இதன் மூலம் தொழில் நுட்பம் தெரிந்த பணியாளர்களை தொடர்ந்து பணியாற்ற வைப்பதன் மூலம் வேலைத்திறன் மேம்படும்.

பால் பதப்படுத்துவதற்கான கட்டமைப்பை நாள் ஒன்றுக்கு 70 இலட்சம் லிட்டர் கையாளும் திறனை உயர்த்தி அதற்கு ஈடாக நாள் ஒன்றுக்கு 70 இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யவும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

தற்போதுள்ள சூழ்நிலைக்கு ஏற்ப பால் உற்பத்தியை பெருக்க வேண்டும். தமிழ்நாட்டில் அனைத்து பால் உற்பத்தியாளர்கள் பயன்பெறும் வகையில் உகந்த சூழலை உருவாக்க வேண்டும், பால் உற்பத்தியை பெருக்க கால்நடைகளுக்கு சத்துக்கள் நிறைந்த தீவனம் கொடுக்கப்பட வேண்டும். கால்நடைகளின் வளர்ச்சியை மேம்படுத்த பல்வேறு திட்டங் களை செயல்படுத்திட வேண்டும்.

ஆவினில் பால் தரம் சிறப்பாக உள்ளதால் அதனை மேலும் மேம்படுத்த வலுவான கட்டமைப்பை நவீனபடுத்த வேண்டும். பொது மக்கள் அதிகம் கூடும் சுற்றுலாத் தலங்கள், பொழுதுபோக்கு இடங்கள், கடற்கரை, பேருந்து நிலையங்கள் போன்ற இடங்களில் பாலகங்களை அதிகமாக்க வேண்டும் என்று கூறினார்.

இக்கூட்டத்தில், பால்வளத்துறை ஆணையர் மற்றும் மேலாண்மை இயக்குநர் மருத்துவர். ந. சுப்பையன், உயர் அதிகாரிகள் மற்றும் அலுவலர்கள் கலந்துக் கொண்டனர்.

டி.ஆர்.பாலு எம்.பி அமைச்சர் தா.மோ.அன்பரசன் சிறப்புரை!

# தாம்பரம் கிழக்கு பகுதிக் கழகச் செயல்வீரர்கள் கூட்டம்!

## மாடம்பாக்கம் ஆ.நடராஜன் வரவேற்புரை! எஸ்.ஆர்.ராஜா - க.வசந்தகுமாரி பங்கேற்பு!

காஞ்சிபுரம், மே. 20 காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், தாம்பரம் கிழக்கு பகுதி கழகச் செயல் வீரர்கள் கூட்டம் (21.5.2023 ஞாயிற்றுக்கிழமை) காலை 8 மணிக்கு, ரேணுகாம்பாள் நகர் மாடம்பாக்கம், ஹன்சா கார்டன் அருகில் நடைபெறுகிறது.

வி.ஜெயராமன் தலைமை வகிக்கிறார்.

இ.எம்.சாம்சன், டி.ராஜாராம், எஸ்.விமலா, ஆர்.பன்னீர்செல்வம், ஜெ.செல்வம், எஸ்.வேலவன், பொ.செந்தில்குமார், எம்.செந்தில்குமார், ராமதேவி செந்தில்குமார் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

தாம்பரம் கிழக்கு பகுதிச் செயலாளர் மாடம்பாக்கம் ஆ.நடராஜன் வரவேற்புரை ஆற்றுகிறார்.

இக்கூட்டத்தில் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி, மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆகியோர் சிறப்புரை ஆற்றுகின்றனர்.

இக்கூட்டத்தில் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ, தாம்பரம் மேயர் க.வசந்தகுமாரி, மாநகர துணை மேயர் கோ.காமராஜ், தொகுதிப் பார்வையாளர் ஆர்.தசரதன், திருநீர்மலை த.ஜெயக்குமார், இரா.நரேஷ் கண்ணா, பொன்.சதாசிவம், வ.விஜயரங்கன், எம்.கண்ணன் (எ) சாந்தகுமார், எம்.பெருமாள், எம்.மோகனரங்கன் மற்றும் வட்டக் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள், கழக அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், வாக்குச்சாவடி நிலை முகவர்கள், தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்புக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பகுதிப் பொருளாளர் ரா.நவீன் நன்றி கூறுகிறார்.


பெருநகர சென்னை மாநகராட்சி
மண்டலம் - 13

75 சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

ம.அ.13.ந.க.எண்.சி1/2520-1/2023

**e-மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**

கீழ்கண்ட பணிக்கு மண்டல அலுவலர் - 13 அவர்களால் மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரப்படுகிறது ;-

மண்டலம் - 13 பகுதி - 38, 39, 40 மற்றும் 40அ, வார்டு - 168 முதல் 180 வரை உள்ள 53 எண்ணிக்கையிலான மாநகராட்சி பூங்காக்களை ஆண்டு பராமரிப்பு செய்யும் பணி

| பணியின் மதிப்பு தொகை | ஒப்ப முன் வைப்புத் தொகை |
|---|---|
| 1. ரூ.1,26,84,771.90 | 1. ரூ.1,27,000/- |
| 2. ரூ.1,02,56,123.66 | 2. ரூ.1,03,000/- |
| 3. ரூ.1,47,09,856.79 | 3. ரூ.1,47,100/- |
| 4. ரூ.71,20,633.20 | 4. ரூ.71,300/- |

ஒப்பம் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் 30.05.2023 அன்று பிற்பகல் 3.00 மணி வரை
ஒப்பம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் 31.05.2023 அன்று பிற்பகல் 3.30 மணி

செ.ம.தொ.இ / 2663 / ஒப்பந்தப்புள்ளி / 2023

மண்டல அலுவலர் - 13

சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்




திருத்தணி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட திருத்தணி துணை நிலையத்தில் மின் பற்றாக்குறையை போக்க ரூ 1.96 கோடி மதிப்பீட்டில் 10 மெகா வோல்ட் மின்மாற்றியை 25 மெகா வோல்ட் மாற்றியாக தரம் உயர்த்தி தமிழ்நாடு முதல்மைச்சர் காணொளி காட்சி மூலம் மக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார் . இந் நிலையில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் திருத்தணி சட்டமன்ற உறுப்பினருமான திருத்தணி எஸ்.சந்திரன் மின்விநியோகத்தை தொடங்கி வைத்தார். உடன் மேற்பார்வை பொறியாளர் காஞ்சிபுரம் சுனில் திருத்தணி கோட்டார் செயற்பொறியாளர் பாரிராஜ் உதவி செயற்பொறியாளர்கள் ராஜேந்திரன், முருகா பூபதி, கோடீஸ்வரி, ஒன்றிய கழகச் செயலாளர் ஆர்த்தி ரவி , சி.என் சண்முகம் , சி.ஜெ.சீனிவாசன், டி.பி.சந்திரன், திருத்தணி நகர இளைஞரணி அமைப்பாளர் ம.கிரண் உள்பட அதிகாரிகள் கழக நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் பலர் உள்ளனர்.

எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில்

# சிறைவாசிகள் 98.52 சதவிகிதம் தேர்ச்சி

சென்னை, மே 20- எஸ்.எஸ்.எல்.சி (10ஆம் வகுப்பு) தேர்வில் வெற்றி பெற்ற சிறைவாசிகளின் தேர்ச்சி விகிதம் 98.52 சதவீதம் ஆக உள்ளது.

இது குறித்து வெளியான செய்திக் குறிப்பு வருமாறு:-

சிறைகள் மற்றும் சீர்த்திருத்தப்பணிகள் துறையால் செயல்படுத்தப்பட்டு வரும் மறுவாழ்வு, மறு சீரமைப்பு நடவடிக்கைகளில், சிறைவாசிகளுக்கு வழங்கப்படும் கல்வி முதன்மையானதாகவும், முக்கியமானதாகவும் உள்ளது.

சிறைவாசிகளில் பெரும்பாலானோர் எழுத படிக்க தெரியாதவர்கள் என்பதால் சிறைகளில் பல்வேறு எழுத்தறிவு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. விடுதலைக்குப் பின்னர் சிறைவாசிகள் வாழ்வாதாரப் பணிகளில் ஈடுபடும் வண்ணம் அவர்களை தயார்படுத்தும் நோக்கில் பல்வேறு கல்வி மற்றும் தொழிற்கல்வி பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. தகுதி வாய்ந்த ஆசிரியர்களைக் கொண்ட ஆரம்பப் பள்ளிகள், அனைத்து மத்திய சிறைகள், பெண்கள் தனிச் சிறைகள் மற்றும் மாவட்டச் சிறை (ம) பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை ஆகியவற்றில் செயல்பட்டு வருகின்றன.

2022-2023ம் கல்வி ஆண்டில், வெவ்வேறு சிறைகளை சேர்ந்த 9 பெண் சிறைவாசிகள் உட்பட மொத்தம் 203 சிறைவாசிகள் 10 ஆம் வகுப்பு பொதுத் தேர்வு எழுதினர்.

சிறைகள் மற்றும் சீர்திருத்த பணிகள் துறையின் கோரிக்கையின் படி, மாநில பள்ளிக் கல்வித்துறையால் சிறைவாசிகள் அந்தந்த சிறையிலேயே தேர்வு எழுதிட வழிவகை செய்யப்பட்டது.

அவர்களில், 9 பெண் சிறைவாசிகள் உட்பட 200 சிறைவாசிகள் தேர்ச்சி பெற்றுள்ளனர். சிறைகளிலிருந்து, 10 ஆம் வகுப்பு தேர்வு எழுதிய சிறைவாசிகளில், 98.52 % சிறைவாசிகள் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

தோல்வி அடைந்த மாணவர்களுக்கு

# துணைத்தேர்வு எழுத நடவடிக்கை!

## அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யா மொழி தகவல்!

சென்னை, மே 20 - பத்தாம் வகுப்பு தேர்வில் தோல்வி அடைந்த மாணவர்களை துணைத் தேர்வு எழுத வைக்க பள்ளிக்கல்வித்துறை சார்பில் நடவடிக்கை எடுக்கப் பட்டு வருவதாக, அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யா மொழி தெரிவித்துள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், கடந்த ஆண்டுகளை ஒப்பிடுகையில் 10 ஆம் வகுப்பு தேர்வில், அரசு பள்ளிகளின் தேர்ச்சி விகிதம் அதிகரித்திருப்பதாக கூறினார். இந்த ஆண்டு முதன்முறையாக அரசு பள்ளிகளில் இருந்து பாலிடெக்னிக் மற்றும் ஐ.டி.ஐயில் சேரக்கூடிய மாணவர்களை கண்டறியப்படும் என்றும் பத்தாம் வகுப்பு தேர்வில் தோல்வி அடைந்த மாணவர்களை துணைத் தேர்வு எழுத வைக்க பள்ளிக்கல்வித் துறை சார்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யா மொழி தெரிவித்தார்.

தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு

# மாநில நிர்வாகிகள் கூட்டம்!

## ஆதிதிராவிடர் நல குழுச் செயலாளர் ஆ. கிருஷ்ணசாமி, எம்.எல்.ஏ. அறிவிப்பு!

தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு மாநில நிர்வாகிகள் கூட்டம் வருகிற 23-5-2023 செவ்வாய்கிழமை, முற்பகல் 12.00 மணி அளவில் சென்னை, அண்ணா அறிவாலயத்திலுள்ள கழக அலுவலகத்தில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு மாநில நிர்வாகிகள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் : தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள் நூற்றாண்டு விழா.


"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 19.5.2023

ஆ.கிருஷ்ணசாமி, எம்.எம்.ஏ.
செயலாளர்
தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## பி.டி.ஆர். பழனிவேல்ராசன்

மே 20 (2006)



தமிழக சட்டமன்ற உறுப்பினராக நான்கு முறையும் – சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும், தமிழக சட்டமன்ற பேரவைத் தலைவராகவும் – பின்னர் தமிழக அரசின் அறநிலையத் துறை அமைச்சராகவும் பணியாற்றியவர்.

கழகத்தின் சொத்து பாதுகாப்புக் குழு தலைவராகவும் பணியாற்றியவர்.

“அவரை நினைக்கும்போதெல்லாம் அவரது அடக்கமும், பண்பும், சான்றாண்மையும் பளிச்சிடுகின்றன” என தலைவர் கலைஞர் அவர்கள் நினைவுகூர்ந்தார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.